ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2019 நவெம்பர் 14 |

## இலங்கை சுபீட்சச் சுட்டெண் - 2018

***அனைத்து மாகாண சுபீட்சச் சுட்டெண்களிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களின் காரணமாக 2018இல் இலங்கை சுபீட்சச் சுட்டெண் அதிகரித்துள்ளது.***


### தேசிய சுபீட்சம்

2018இல் இலங்கை சுபீட்சச் சுட்டெண்[1] 2017இல் பதிவுசெய்யப்பட்ட 0.548 இலிருந்து 0.783 இற்கு அதிகரித்துள்ளது. இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களுமான பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்கள் நலனோம்புகை, மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு என்பன இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்துள்ளன.

| | 2017 | 2018 |
|---|---|---|
| ***இலங்கை சுபீட்சச் சுட்டெண்*** | ***0.548*** | ***0.783*** |
| *துணைச் சுட்டெண்கள்* | | |
| *பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல்* | *0.658* | *1.034* |
| *மக்கள் நலனோம்புகை* | *0.532* | *0.764* |
| *சமூக பொருளாதார உட்கட்டமைப்பு* | *0.454* | *0.550* |

பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண் மேம்பட்டமைக்கு 2018ஆம் ஆண்டுப்பகுதியில் காணப்பட்ட விலை உறுதிப்பாடும் முறைசாராத் துறையின் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் முக்கிய காரணங்களாக அமைந்தன. மக்கள் நலனோம்புகைத் துணைச் சுட்டெண்ணினைப் பொறுத்தவரை முக்கியமான மேம்பாடுகள், நலவசதிகள், கல்வியின் தரம், மக்கள் செல்வம் மற்றும் சூழல் தூய்மை ஆகிய அம்சங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்ணும் மெதுவாக அதிகரித்தமைக்கு மின்வலு, போக்குவரத்து மற்றும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பவியல் வசதிகள் என்பனவற்றின் கிடைப்பனவிலும் குழாய்வழி நீரின் தரத்திலும் ஏற்பட்ட முன்னேற்றங்களே முக்கிய காரணங்களாகும்.


**வரைபடம் 1 - இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்களின் அசைவுகள் 2014 – 2018**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

[1] இலங்கை சுபீட்சச் சுட்டெண் நாட்டின் சுபீட்ச மட்டத்தினை அளவிடுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கூட்டுக் குறிகாட்டியாகும். இச்சுட்டெண் சுபீட்சத்தின் வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ள 43 மாறிகளினால் அளவிடப்பட்டவாறான பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்களின் நலனோம்புகைச் சுட்டெண் மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

**வரைபடம் 2 – இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் உள்ளடக்கப்பட்ட அம்சங்கள்**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

## மாகாண ரீதியான சுபீட்சம்

மாகாணங்கள் முழுவதிலுமுள்ள சுபீட்சத்தின் மட்டத்தினை அளவிடுவதற்காகத் தொகுக்கப்பட்ட மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்கள் அனைத்து மாகாணங்களிலும் அதிகரித்துள்ளன. மேல் மாகாணம் மாகாண துணைச் சுட்டெண்ணினதும் அதன் துணைச் சுட்டெண்களினதும் உயர் பெறுமதிகளின் காரணமாக தலையாய இடத்தினை பெற்றுக்கொண்டது. அதேவேளை, மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்ணின் உயர்ந்த அதிகரிப்பு சப்பிரகமுவா மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்டது. இதற்கு, விலை உறுதிப்பாடு மற்றும் முறைசாரா துறைக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றினால் பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண் தூண்டப்பட்டமையே காரணமாகும்.

**வரைபடம் 3 – மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்[2]: 2017 – 2018**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## மாகாண சுபீட்சச் சுட்டெண்ணின் செயலாற்றம்

### பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்

அனைத்து மாகாணங்களிலும் பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண் அதிகரித்ததுடன் விலை உறுதிப்பாட்டிலும் முறைசாரா துறைக் கூலிகளிலும் முன்னேற்றங்கள் பதிவுசெய்யப்பட்டன. துணைச் சுட்டெண்ணிற்குள்ளே உயர்ந்த அதிகரிப்பு வட மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்டமைக்கு மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களுக்குப் புறம்பாக, தொழில்நிலை அம்சங்களில் ஏற்பட்ட மேம்பாடுகளும் காரணங்களாக அமைந்தன.

### மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்

மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண் அனைத்து மாகாணங்களிலும் ஆதிக்கம் நிறைந்த விதத்தில் மேம்பட்டமைக்கு கல்வியின தரம், சூழலின் தூய்மை மற்றும் மக்களின் செல்வம் ஆகிய அம்சங்களில் ஏற்பட்ட மேம்பாடுகள் காரணமாக இருந்தவிடத்து ஊர்திகளின் சொத்துடமையும் சிறப்பு அங்காடிகளை அணுகும்தன்மையும் அதிகரித்தன. சப்பிரகமுவா மாகாணம் இத்துறையில் உயர்ந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்த போதும் ஊர்திகளின் சொத்துடமை அம்சங்கள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளையில் மற்றைய அனைத்து மாகாணங்களிலும் இவ்வம்சத்தில் முன்னேற்றத்தினை அவதானிக்க முடிந்தது.

---

[2] சுட்டெண் பெறுமதிகள் கடந்த பத்து ஆண்டுகள் தொடர்பில் ஒவ்வொன்றாக அனைத்து மாறிகளையும் தரப்படுத்துவதன் மூலம் தொகுக்கப்படுகின்றன. ஆகவே, சுட்டெண் பெறுமதி ஒன்றின் அடையாளம் தொடர்பான சராசரியுடன் ஒப்பிடுகையில் நேர்க்கணிய அல்லது எதிர்க்கணியப் பிறழ்வுகளைச் சுட்டுவதாகவுள்ளது. எனவே, சுட்டெண்ணில் காணப்படும் எதிர்க்கணிப் பெறுமதிகள் சுபீட்ச மட்டங்கள் எதிர்மறையாகக் காணப்படுகின்றன என்பதனை சுட்டுவதாக இருக்காது.

### சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்

சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் எட்டு மாகாணங்களில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தது. இம்மேம்பாட்டிற்கு மின்வலு மற்றும் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகளின் அதிகரித்த கிடைப்பனவே முக்கிய காரணமாக அமைந்தது. இத்துணைச் சுட்டெண்ணிற்குள்ளே உயர்ந்த அதிகரிப்பு மேல் மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்டமைக்கு மேற்குறிப்பிட்ட காரணங்களுக்குப் புறம்பாக, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து வசதிகள், குற்றச்செயல்களற்ற சூழல் மேம்பட்டமையும் குழாய்வழி நீரின் தரத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் காரணங்களாக அமைந்தன. அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் துணைச் சுட்டெண் தேய்வடைந்தமைக்கு தொலைத்தொடர்பூட்டல் வசதிகள், வீதி அபிவிருத்தி, குற்றங்களற்ற சூழல் மற்றும் சிவில் நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு என்பனவற்றின் மட்டங்கள் குறைவடைந்தமை முக்கிய காரணங்களாகும்.

**அட்டவணை 1 – மாகாண சுபீட்சச் சுட்டெண்கள், துணைச் சுட்டெண்கள் மற்றும் மாகாண ரீதியான தரங்கள்**

| சுட்டெண் மற்றும் மாகாணம் | சுட்டெண் பெறுமதி | | மாகாணத் தரம் | |
|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2017 | 2018 |
| **மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.272 | 0.490 | 3 | 2 |
| கிழக்கு | -0.046 | 0.168 | 9 | 9 |
| வட மத்திய | 0.062 | 0.256 | 6 | 7 |
| வட மேல் | 0.227 | 0.456 | 4 | 4 |
| வடக்கு | 0.099 | 0.399 | 5 | 5 |
| சப்பிரகமுவா | 0.025 | 0.341 | 8 | 6 |
| தென் | 0.309 | 0.470 | 2 | 3 |
| ஊவா | 0.057 | 0.201 | 7 | 8 |
| மேல் | 1.071 | 1.301 | 1 | 1 |
| **பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.283 | 0.586 | 3 | 4 |
| கிழக்கு | -0.198 | 0.302 | 9 | 9 |
| வட மத்திய | 0.091 | 0.495 | 7 | 6 |
| வட மேல் | 0.198 | 0.672 | 4 | 3 |
| வடக்கு | -0.170 | 0.473 | 8 | 7 |
| சப்பிரகமுவா | 0.117 | 0.568 | 5 | 5 |
| தென் | 0.332 | 0.680 | 2 | 2 |
| ஊவா | 0.105 | 0.345 | 6 | 8 |
| மேல் | 1.524 | 1.734 | 1 | 1 |
| **மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.118 | 0.274 | 7 | 7 |
| கிழக்கு | -0.078 | 0.075 | 9 | 9 |
| வட மத்திய | 0.148 | 0.318 | 6 | 6 |
| வட மேல் | 0.244 | 0.390 | 4 | 5 |
| வடக்கு | 0.300 | 0.397 | 3 | 4 |
| சப்பிரகமுவா | 0.162 | 0.406 | 5 | 3 |
| தென் | 0.469 | 0.552 | 2 | 2 |
| ஊவா | -0.001 | 0.078 | 8 | 8 |
| மேல் | 0.903 | 1.125 | 1 | 1 |
| **சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்** | | | | |
| மத்திய | 0.416 | 0.610 | 2 | 2 |
| கிழக்கு | 0.139 | 0.127 | 5 | 7 |
| வட மத்திய | -0.052 | -0.044 | 8 | 9 |
| வட மேல் | 0.239 | 0.305 | 3 | 4 |
| வடக்கு | 0.168 | 0.328 | 4 | 3 |
| சப்பிரகமுவா | -0.205 | 0.050 | 9 | 8 |
| தென் | 0.126 | 0.179 | 6 | 6 |
| ஊவா | 0.066 | 0.179 | 7 | 5 |
| மேல் | 0.787 | 1.043 | 1 | 1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

இலங்கை சுபீட்சச் சுட்டெண் 43 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டிருப்பதுடன் மூன்று துணைச் சுட்டெண்களாக வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் சமமான நிறையினைக் கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு மாறியும் அதற்குரிய துணைச் சுட்டெண்களுக்குள் சமமான நிறையைக் கொண்டிருக்கும்.

பொருளாதார வியாபார சூழல் துணைச் சுட்டெண் வாழ்க்கைத்தரம், தொழில்நிலை, வருமானம், வறுமை, விலை உறுதிப்பாடு, துறைவாரியான தொழில்நிலை, கைத்தொழில் அடர்த்தி மற்றும் வங்கித்தொழில் அடர்த்தி ஆகிய வகைகளாக்கப்பட்ட 9 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்படுகிறது. மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண் நலக் கவனிப்பு வசதிகளின் கிடைப்பனவு, கல்வி வசதிகளின் கிடைப்பனவு, கிடைக்கத்தக்க கல்வி வசதிகளின் தரம், செல்வம், பொழுதுபோக்கு வசதிகளின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு, காற்றின் தரம் மற்றும் சூழலின் சுத்தமான தன்மை என்பன தொடர்பான 22 மாறிகளை உள்ளடக்கித் தொகுக்கப்படுகிறது. சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் 12 மாறிகளை உள்ளடக்கி இருப்பதுடன் அவை தொடர்பான அம்சங்களாக மின்வலுவின் கிடைப்பனவு, தொடர்பூட்டல் வசதிகளின் கிடைப்பனவு, வீதி உள்ளடக்கத்தின் கிடைப்பனவு, குற்றச்செயலற்ற சூழல், போக்குவரத்து வசதிகளின் கிடைப்பனவு, சுத்தமான குடிநீர் வசதிகளின் கிடைப்பனவு, தரமான குழாய்வழி நீர், தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகளின் கிடைப்பனவு, சுகாதாரக் கிடைப்பனவு குடியியல் நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு என்பன காணப்படுகின்றன.

**முறையியல்**

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுப்பதில் பயன்படுத்தப்பட்ட மாறிகள் அளவீட்டின் பல்வேறுபட்ட அலகுகளின் வடிவில் காணப்படுகின்றன. ஆகவே, கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட தரவுகளை தரப்படுவதன் மூலம் பொதுவான அளவு ஒன்றிற்கு இவ்வனைத்து மாறிகளும் மாற்றியமைக்கப்படுகின்றன. நாடு மற்றும் மாகாணங்களுக்கான சுட்டெண் பெறுமதிகள் தனித்தனியாக தொகுக்கப்படுவதனால் மாகாண ரீதியான சுட்டெண்களை நாட்டின் மட்டத்தில் அமைந்த சுட்டெண்களுடன் ஒப்பிட முடியாது. எனவே, மாகாண ரீதியான மட்டத்திலமைந்த சுட்டெண்களை மாகாணங்களுக்கிடையே ஒப்பிட முடியுமென்பதுடன் நேரம் மற்றும் நாட்டு மட்டத்திலான சுட்டெண்களை நேர அளவில் மட்டுமே ஒப்பிட முடியும்.